*Kantonsschule Reussbühl Luzern*

# கூடுதல் தகவல் சாத்தியங்கள்

### தனிப்பட்ட ஆலோசனை

*எங்கள் ஆதரவு திட்டம் CHANCE KSR பற்றிய மேலும் அனைத்து கேள்விகளும் தொலைபேசியிலோ அல்லது பாடசாலை அல்லது திட்ட நிர்வாகத்துடனான தனிப்பட்ட உரையாடலிலோ அறிந்து கொள்ளலாம். செயலகத்துடன் அஞ்சல் அல்லது தொலைபேசி மூலம் சந்திப்பிற்கான முன்னேற்பாடுகளைச் செய்து கொள்ளுங்கள்.*

*நாங்கள் உற்சாகமுள்ள ஆதரவுக் குழுக்களை எதிர்நோக்குகிறோம், பங்கேற்பாளர்களுக்கு CHANCE KSR ஆதரவு திட்டத்தி ல்ஒரு நல்ல ஆரம்பமாகட்டும் என வாழ்த்துகிறோம்!*

*பள்ளி நிர்வாகமும் திட்டக் குழுவும்*

**Luzern Reussbühl கன்றோன் பாடசாலையின் CHANCE KSR ஆதரவு திட்டம் பற்றிய கூடுதல் தகவல்கள்:**

- *எங்கள் இணையதளத்தில்:*

**www.ksreussbuehl.lu.ch/ausbildung/chancengerechtigkeit**

- *திட்ட நிர்வாகத்துடன்:*


- Kathrin Di Berardino, Email: kathrin.diberardino@edulu.ch
- Christian Fallegger, Email: christian.fallegger@edulu.ch
- Jörg Rentsch, Email: joerg.rentsch@edulu.ch





KANTON LUZERN

Bildungs- und Kulturdepartement
Kantonsschule Reussbühl Luzern
Ruopigenstrasse 40
6015 Luzern

Telefon 041 349 72 00
www.ksreussbuehl.lu.ch




KANTONSSCHULE | REUSSBÜHL

LUZERN

KANTON LUZERN

# CHANCE KSR

## இடப்பெயர்வு பின்னணியுடன் கூடிய (அல்லது இல்லாத) ஊக்கமுள்ள இளைஞர்களுக்கான ஆதரவு திட்டம்

Kantonsschule Reussbühl Luzern | ksreussbuehl.lu.ch

Kantonsschule Reussbühl Luzern

# ஆதரவு திட்டம் CHANCE KSR

துரதிர்ஷ்டவசமாக, சுவிஸ் கல்வி முறையில் சமமற்ற வாய்ப்புகள் இன்னும் நடைமுறையில் உள்ளன: இடப்பெயர்வு பின்னணியுடன் கூடிய பல திறமையான, ஆனால் சமூக ரீதியாக பின்தங்கிய இளைஞர்கள் (அல்லது இல்லாத) ஏற்கனவே மேல்நிலைப் பள்ளிக்குப் பிறகு தங்கள் பள்ளிப்படிப்பை நிறுத்தி விட்டனர் அல்லது பின்னர் ஜிம்னாசியத்தில் (உயர்நிலைப் பாடசாலை) தோல்வியடைகிறார்கள்.

எங்கள் ஆதரவு திட்டமான CHANCE KSR உடன் பங்கேற்பவர்கள் கன்ரோன் பாடசாலைக்கு மாற்றப்படும்போது வெற்றிகரமாக சமாளிக்கவும், உயர் ஜிம்னாசியம் பாடங்களின் தேவைகளை நீண்ட காலத்திற்கு ஈடு செய்யவும், பாடசாலை இறுதித்தேர்வில் தேர்ச்சி பெறவும் உதவுகிறோம்.

## ஆதரவு திட்டத்தில் யார் அனுமதிக்கப்படுவார்கள்?

ஜிம்னாசியம் (உயர்நிலைப் பாடசாலை) க்கு போதுமான ஆற்றலும் ஊக்கமும் கொண்ட, ஆனால் பெற்றோர்களால் போதுமான அளவு (நிதி ரீதியாக) ஆதரிக்க முடியாத இடப்பெயர்வு பின்னணியைக் கொண்ட (அல்லது இல்லாத) மாணவர்களை இந்த ஆதரவு திட்டம் இலக்காகக் கொண்டுள்ளது.

## சேர்க்கை செயல்முறை எவ்வாறு இயங்குகிறது?

ஆரம்ப, இடைநிலை மற்றும் கன்ரோன் பாடசாலை வகுப்பு ஆசிரியர்கள் 6 ஆம் ஆரம்ப பாடசாலை, 2வது / 3வது மேற்பிரிவு வகுப்பு (A & B) மற்றும் & கன்ரோன் பாடசாலை 2வது மற்றும் 4வது வகுப்பு மாணவர்களுக்கு பரிந்துரைக் கடிதம் வழங்கலாம். இது பதிவுப் படிவம், இறுதிச் சான்றிதழ் மற்றும் பெற்றோரின் தற்போதைய வரி சான்றிதழுடன் சமர்ப்பிக்கப்படும். (பதிவு காலக்கெடு மார்ச் 1)

பல்வேறு சோதனைகள் (ஆற்றல், ஊக்கம்), ஆர்வமுள்ள மாணவர்களிடமிருந்து ஊக்கமளிக்கும் கடிதம் மற்றும் ஒரு சேர்க்கை நேர்காணல் ஆகியவை எங்கள் ஆதரவு திட்டத்தில் உறுதியான சேர்க்கைக்கு அடிப்படையாக அமைகின்றன. கோடை விடுமுறைக்குப் பிறகு இது தொடங்குகிறது.

## ஆதரவு திட்டத்தின் கூறுகள் யாவை?

- ஆதரவு திட்டத்தின் முக்கிய அங்கமாக, அனைத்து பங்கேற்பாளர்களும் ஒரு தனிப்பட்ட பயிற்சியைப் பெறுகிறார்கள்.
- ஆரம்ப மற்றும் மேல் ஜிம்னாசியம் (உயர்நிலைப் பாடசாலை) இரண்டிலும் குறைந்தபட்சம் ஒரு முறையாவது "கலாச்சாரக் காட்சிகள்" என்ற சலுகையைப் பயன்படுத்துகிறார்கள்.

**a) ஆரம்ப ஜிம்னாசியம் (1வது மற்றும் 2வது வகுப்பு LZG):**

- பங்கேற்பாளர்கள் வாரத்திற்கு இரண்டு முறை "மேற்பார்வையுடனான கற்றலில்" கலந்துகொள்கிறார்கள்.
- அவர்கள் டொச் மொழியில் 1 & 2 உதவும் படிப்புகளை முடித்து, தேவைப்பட்டால் DAZ பாடத்தை (டொச் இரண்டாவது மொழியாக) உள்ளவர்களக்கான மொழிக் கல்வி பெறுகிறார்கள்.

**b) உயர்நிலைப்பாடசாலை (3வது - 6வது வகுப்பு LZG மற்றும் KZG):**

- பங்கேற்பாளர்கள் 4வது மற்றும் 5வது வகுப்புகளில் டொச் எழுத்துப் பயிற்சியில் கலந்துகொண்டு தேவைப்பட்டால் DAZ பாடத்தைப் பெறுவார்கள்.
- தேவைப்பட்டால், அவர்கள் 3வது மற்றும் 4வது வகுப்பில் கணித ஊக்க வகுப்பை எடுப்பார்கள்.
- அவர்கள் நுளைவுத் தேர்வு திட்டத்திற்கான மற்றும்5 வது மற்றும் 6வது வகுப்பு படிப்பு தேர்வுக்கான ஆதரவுச் சலுகையில் கலந்துகொள்வார்கள்.

## தனிப்பட்ட பயிற்சி எப்படி இருக்கும்?

- சூரிச் வள மாதிரியின் (ZRM) படி அனுபவம் வாய்ந்த, சிறப்புப் பயிற்சி பெற்ற ஆசிரியர்களால் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.
- சூரிச் வள மாதிரி நன்கு நிரூபிக்கப்பட்ட சுய மேலாண்மை பயிற்சியாகும்.
- மாணவர்கள் வேலை நுட்பம் மற்றும் அமைப்பு, ஊக்க ஆதரவு மற்றும் விடாமுயற்சி மற்றும் மன அழுத்த மேலாண்மைக்கான திறமையான உத்திகளைப் பெறுகிறார்கள்.
- பயிற்சிகள் ஆதரவு குழுவில் ஒரு கூட்டுப் பட்டறையுடன் தொடங்குகின்றன. இதைத் தொடர்ந்து தனிப்பட்ட பயிற்சியாளருடன் வழக்கமான கலந்துரையாடல்கள் நடைபெறுகின்றன.





4வது வகுப்புப்பிள்ளையிடம் இருந்து ஒரு பதிவு:
பயிற்சி எனக்கு நீண்ட காலத்தில் அதிகளவு உதவியது. உங்கள் உதவிக்குறிப்புகள் மற்றும் வித்தைகளிலிருந்து நான் இன்னும் பயனடைகிறேன். இந்த உதவிக்குறிப்புகள் அந்நிய மொழி பாடத்திட்டத்தைக் கற்றுக்கொள்ளவும், நானே நிர்ணயித்த இலக்குகளை அடையவும் நிறைய உதவியுள்ளன. பயிற்சி இல்லாமல் நான் ஒருபோதும் அமர்வில் இடம் பெற்றிருக்கமாட்டேன், இப்போது உணர்வது போல ஒருபோதும் இவ்வளவு சிறப்பாக உணர்ந்திருக்க மாட்டேன் என்று எனக்குத் தெரியும்.

## ஆதரவு திட்டத்தின் பின்னால் யார் இருக்கிறார்கள்? -

- CHANCE KSR ஆதரவு திட்டம் என்பது பள்ளி நிர்வாகம் மற்றும் 2019 கோடையில் Reussbühl கன்ரோன் பாடசாலையின் அர்ப்பணிப்புமிக்க ஆசிரியர்களால் தொடங்கப்பட்ட 4 ஆண்டு முன்னோடித் திட்டமாகும்,
- உள்ளடக்கம் மற்றும் யோசனைகளைப் பொறுத்தவரை, இது 2008 ஆம் ஆண்டு முதல் Zürich உள்ள Unterstrass ஜிம்னாசியத்தில் (உயர்நிலைப் பாடசாலை) மேற்கொள்ளப்பட்ட ChagALL திட்டத்தின் அடிப்படையில் அமைந்துள்ளது. ChagALL க்கு பொறுப்பானவர்கள் இதைச் செயல்படுத்த எங்களுக்கு அறிவுறுத்துகிறார்கள்.
- எங்கள் பகுதியின் ஆரம்ப மற்றும் இடைநிலைப் பாடசாலைகளுடன் நாங்கள் இணைந்து செயல்படுகிறோம்.
- இந்த திட்டம் Zürich பயன்பாட்டு அறிவியல் பல்கலைக்கழகத்தின் (ZHAW) நிபுணர்களால் அறிவியல் பூர்வமாக நடத்தப்பட்டு மதிப்பீடு செய்யப்படுகிறது.

4 வது வகுப்புப் பிள்ளையிடமிருந்து ஒரு பதிவு:
இந்தப் பயிற்சியின் உதவியுடன் என்னால் அடையக்கூடிய இலக்குகளை உருவாக்க முடியும். மற்ற உயர்நிலைப் பாடசாலை மாணவர்களுடன் பேசியதன் மூலம், சில சமயங்களில் பாடசாலைப் பாடத்திட்டத்தின் அதிக சுமையை நான் மட்டும் அனுபவிக்கவில்லை என்பதை அறிந்துகொண்டேன். கூடுதலாக, வழக்கமான சந்திப்புகள் மூலம், பயிற்சிக்குப் பிறகு எனது குறிக்கோள்களை நினைவுபடுத்திக் கொண்டு நான் பயனடைந்தேன். தனிப்பயனாக்கப்பட்ட இலக்குகளை நானே நிர்ணயித்தால் பள்ளி இறுதித் தேர்வில் வெற்றி பெறுவது (மெட்ரிகுலேஷன்) சாத்தியம் என்பதை இப்போது நான் அறிவேன்.

## எங்கள் பயிற்சியாளர்கள் எப்படிப்பட்டவர்கள்?

- மேலாண்மை: Kathrin Di Berardino (உயிரியல் ஆசிரியர்)
- Martina Blättler (வரலாறு மற்றும் புவியியல் ஆசிரியர்), Edith Bollhalder (புவியியல் ஆசிரியர்), Christian Fallegger (வரலாற்று ஆசிரியர்), Matteo Tardo (பிரெஞ்சு மற்றும் இத்தாலிய ஆசிரியர்) மற்றும் Marc von Wartburg (விளையாட்டு ஆசிரியர்). அனைத்து பயிற்சியாளர்களும் அனுபவம் வாய்ந்த வகுப்பு ஆசிரியர்களும் ஆவார்கள்.



## ஆதரவு திட்டத்திற்கு யார் நிதியளிக்கிறார்கள்?

- CHANCE KSR ஆதரவு திட்டத்தை UBS Optimus அறக்கட்டளை ஆதரிக்கிறது.
- Luzern மாநில ஆதரவு திட்டம் மற்றும் டொச் மற்றும் கணிதம், எழுத்து பயிற்சி, DAZ மற்றும் மேற்பார்வையுடனான கற்றல் ஆகியவற்றில் சிறப்பு வகுப்புகள் மற்றும் பாடத்திட்டங்களுக்கு நிதியளிக்கிறது, இவை Reussbühl கன்ரோன் பாடசாலை அனைத்து மாணவர்களுக்குமானது.
- பங்கேற்பாளர்களுக்கு, ஆதரவு திட்டத்தில் பங்கேற்பு கட்டணமற்றது.